1973 மார்ச் 20]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த காதி ஸ்திராயலத்திலிருந்து சமீபத்தில் இந்த சாயில்ட் சூட்ஸ் என்று சொல்லி விற்கப்பட்டதே சென்னையில் நடந்த எக்சிபிஷனில், எவ்வளவு விற்கப்பட்டது, அதற்காக மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்ததா என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அது பற்றிய கேள்வி அல்ல இது. இன்னும் அதனுடைய கணக்கு என்னிடத்தில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், மதுரை காதி மண்டலப் பகுதியில் மட்டும் ரூ. 30 லட்சம் என்று கூறினர்கள். அதுபோல் மாநிலம் முழுவதற்கும் எடுத்துக்கொண்டால், எவ்வளவு லட்சம் இருக்கும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மதுரையைப்பற்றி மட்டும் கேட்டு இருந்தார்கள். அதுபற்றிய கணக்கு தான் வைத்து இருக்கிறேன். மாநிலம் பூராவிற்கும் எவ்வளவு என்று கேட்டால் வேறு கணக்குத் தருகிறேன்.

மாதவரத்தில் பனைபொருள்கள் சங்கக் கண்காட்சி

445 வின.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—செங்கற்பட்டு மாவட்ட பனைபொருள்கள் கூட்டுறவு சம்மேளனம் 1970-ஆம் ஆண்டில் மாதவரத்தில் கண் காட்சி ஒன்று நடத்தியதா?

(இ) ஆம் எனில், அதற்கு ஆன செலவு என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

அசோக்நகர்—அமைந்தகரை இணைப்புச் சாலை

* 414 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அசோக் நகரிலிருந்து அமைந்தகரை வரை பெரிய சாலை அமைத்து அதனை பூந்தமல்லி நெடுஞ்சாலையுடன் இணைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?